டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 21.02.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 201 - Madurai | Online Edition

# கனடாவிற்கு புவிசார் குறியீடு கொண்ட சேலம் ஜவ்வரிசி முதல் முறையாக ஏற்றுமதி

புது தில்லி, பிப்.20

மத்திய வர்த்தக அமைச்சகத்தின் கீழ் இயங்கும் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (அபேடா - APEDA), சேலத்திலிருந்து கனடாவிற்கு 0.5 மெட்ரிக் டன் புவி சார் குறியீடு பெற்ற சேலம் ஜவ்வரிசியை ஏற்றுமதி செய்ய உதவியுள்ளது.

மார்ச் 2023-ல் சேலம் ஜவ்வரிசி புவிசார் குறியீடு பெற்ற பிறகு நேரடியாக அனுப்பப்படும் முதல் ஏற்றுமதி இதுவாகும்.

சபுதானா என்று அழைக்கப்படும் மரவள்ளிக்கிழங்கு சவ்வூடு பயிரில் தமிழ்நாடு மிகப்பெரிய உற்பத்தி மாநிலமாக உள்ளது. சேலம் பகுதி, நீண்ட காலமாக நாட்டின் இதன் மையமாக உள்ளது. இது இந்தியாவின் பல பகுதிகளில் ஒரு முக்கிய உணவாகப் பயன்படுகிறது.

சேலத்தில் ஜவ்வரிசி தொழில், மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் ஈடுபட்டுள்ள பழங்குடி சமூகங்கள் உட்பட ஏராளமான விவசாயி களுக்குப் பெரிதும் பயனளிக்கிறது. புவிசார் குறியீடு சான்றளிக் கப்பட்ட இதை நேரடி ஏற்றுமதி வாய்ப்புகளுடன் இணைப்பதன் மூலம், மரவள்ளிக்கிழங்கு சாகுபடியை நம்பியுள்ள விவசாய குடும்பங்களுக்கு வருமான வாய்ப்புகள் வலுப்படுத்தப்பட்டு உள்ளது.

பாரம்பரியமாக, சேலம் ஜவ்வரிசி மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான், மேற்கு வங்காளத்தில் உள்ள வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டு, அங்கிருந்து அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, வியட்நாம், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்நிலையில் 2026 பிப்ரவரி 18 அன்று தமிழ்நாட்டின் சேலத்தில் உள்ள சேலம் ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழில்துறை கூட்டுறவு சங்க லிமிடெட் (SAGOSERVE) வளாகத்தில் ஏற்றுமதி தொடர்பான ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த முயற்சி, புவி சார் குறியீடு செய்யப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவித்தல், உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் சர்வதேச அளவில் விற்பவர் – வாங்குபவர்களுக்கு இடையே நேரடி சந்தை இணைப்புகளை செயல்படுத்துதல், விவசாய ஏற்றுமதிகளை விரிவுபடுத்துதல் போன்ற அபேடா-வின் உத்திகளுக்கு ஏற்ப அமைந்தது. இதுபோன்ற இன்னும் பல ஏற்றுமதிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

## நெல் விவசாயிகளுக்கு வேளாண் கல்லூரி மாணவி உப்பு கரைசல் செயல்முறை விளக்கம்!



தேனி, பிப்.20

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டாரத்திற்கு உட்பட்ட உ.அம்மாப்பட்டி ஊராட்சியில் இருக்கும் அம்பாசமுத்திரம் கிராமத்தில், மதுரை வேளாண் கல்லூரி மாணவி கே.பத்மாவதி, தனது கிராமப்புற வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் நெல் விளைவிக்கும் விவசாயிகளுக்கு, உப்பு கரைசலைப் பயன்படுத்தி நெல் விதைகளை பிரிக்கும் முறையை செயல் விளக்கமாக செய்து காட்டினார். ஒரு வாளியில் 1.5 கிலோ உப்புக்கு 10 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கரைசலை தயார் செய்து கொள்ளவும். அந்த கரைசலில் நெல் விதைகளை போட வேண்டும். தண்ணீரில் மேலே மிதக்கும் விதைகள் முளைக்கும் திறன் இல்லாத விதைகள் ஆகும். எனவே, அந்த விதைகளை நீக்கி விடுங்கள். பின்னர், கீழே இருக்கும் நல்ல விதைகளை எடுத்து தண்ணீரில் 2 அல்லது 3 முறை நன்றாக கழுவ வேண்டும். அதன் பின்னர், அந்த தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல விதைகளை விதைத்தால், பயிர் முளைத்தல் அதிகமாகும். இந்த விதைப் பிரித்தல் முறையை நேரடியாக செய்து காட்டினார் வேளாண் மாணவி.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை குறித்த வேளாண் உதவி இயக்குநருடன் கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவிகள்



அரியலூர், பிப்.20

தஞ்சை ஈச்சங்கோட்டை அரசு எம்.எஸ்.சுவாமிநாதன் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு மாணவிகள் சர்மிளா, சிந்துஜா, சிவசங்கரி, சினேகா, சௌமியா, சௌந்தர்யா, ஷ்ரேயா சசிதரன், சுபலெஷ்மி, சுபத்ரா, சுபி, சுமிதாபாஷினி, சுவேதா உள்ளிட்டோர் அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணனை சந்தித்தனர். அவர் வேளாண்மை துறையும் பற்றியும் வேளாண்மை உழவர் நலத்துறை பற்றியும் எடுத் துரைத்து போட்டி தேர்வுகளுக்கு எப்படி தயார் செய்ய வேண்டும் என்றும் கூறினார் மற்றும் அரியலூர் மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியரை வேளாண்மை உதவி இயக்குனர் (தரக் கட்டுப்பாடு) வாழ்த்துகள் பெற்றார்கள்.

இம்மாணவிகள் 65 நாட்கள் நடைபெறும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் (RAWE) கீழ் பங்கேற்று, கிராமப் புறங்களில் சமூக விழிப்புணர்வு மற்றும் கல்வி சார்ந்த பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயனடைந்தனர். இதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் ரத்தினசாமியை மாணவிகள் மரியாதை நிமித்தமாக சந்தித்து, தங்களின் RAWE திட்டப் பணிகள் குறித்து விளக்கினர். உடன் இணை இயக்குநர் (JDA) உலகம்மை முருகக்கனி, தரக் கட்டுப் பாட்டு உதவி இயக்குநர் அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆகியோரும் கலந்து கொண்டனர். மாணவிகள் சமூக சேவை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# உயிர்ம வேளாண்மையில் பூச்சி நோய் மேலாண்மை

இயற்கையில் இரண்டு வகையான பூச்சிகள் உள்ளன. இவற்றில் ஒரு வகை தாவரத்தை உண்டு விவசாயிகளுக்கு இழப்பை ஏற்படுத்தும். இரண்டாவது வகை தாவரங்களுக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை உண்டு தாவரங்களின் வளர்ச்சியைப் பாதுகாப்பவை. விவசாயிகளுக்கு நன்மை தரவல்லவை. தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதால் இந்த இரண்டு வகை பூச்சிகளும் கொல்லப்படுகின்றன அல்லது விரட்டப்படு கின்றன. இவற்றை இயற்கை விவசாயத்தில் இரசாயனப் பூச்சிக் கொல்லிகளுக்கு மாற்றாகப் பயன்படுத்துவதன் மூலம் சுற்றுச் சூழலினை மாசுபடாமல் பாதுகாக்கலாம். மேலும் விளைவிக்கப் படும் காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றிலும் இரசாயன கலப் பின்றி இருக்கும் உடல் நலத்திற்கு ஏற்றது. பயிர்களைத் தாக்கி அழிக்கின்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும் அழிக்கவும் பயன் படுத்தப்படும் தாவர இலைக் கரைசலையே தாவர பூச்சி விரட்டி என அழைக்கப்படுகிறது. தாவர வகைகளின் எண்ணிக்கை வைத்து அதனை ஐந்திலை, மூவிலை பூச்சி விரட்டி என அழைக்கின்றோம்.

### மூலிகை பூச்சி விரட்டி

பூச்சிகளுக்கு வெறுப்புணர்ச்சியை ஊட்டக் கூடிய தாவரங் களை பூச்சி விரட்டியாக பயன்படுத்துவது இம்முறையின் நோக்கம். எருக்கு, தங்க அரளி, சிறியா நங்கை, நொச்சி, ஆடாதொடா, தும்பை, பார்த்தீனியம், ஊமத்தை, உண்ணிச் செடி, எட்டி, சீதா இலை, சீமைக்கருவேல், காட்டாமணக்கு, புகையிலை உள்ளிட்ட தாவரங்கள் கசப்புத் தன்மை மிகுந்தது. ஒடித்தால் பால் வடியும். இவைகளை கால்நடைகள் உட் கொள்ளாது. துர்நாற்றம் வீசும் இலைகளைப் மூலிகைப் பூச்சி விரட்டி தயாரிக்க தேர்வு செய்ய வேண்டும்.

1 சதவிகித கரைசலை தயாரிக்க 1 கிலோ அளவிற்கு தாவர இலைகளை சேகரித்து அதனை 80 லிட்டர் தண்ணீர் மற்றும் கோமியத்தில் ஊற வைக்க வேண்டும். பின் வடிகட்டி 100 லிட்டர் வருமளவிற்கு அதாவது மீதம் 20 லிட்டர் தண்ணீர் கலந்து

கொண்டால் ஒரு சதவிகித மூலிகை கரைசல் தயாராகிவிடும். தொடர்ந்து ஒரே வகை மூலிகை இலைச் சாறுதானே என அதிக அளவில் பயன்படுத்தக் கூடாது. அதனால் நன்மை செய்யும் பூச்சிகள் கூட அழிந்து விடும். சில சந்தர்ப்பங்களில் பயிர்கள் கருகி விடக்கூடும். பூச்சியின் தாக்குதல் அதிகமிருப்பின் 3, 5 சதவிகித கரைசல் தேவைப்படும். இக்கரைசரை 15 நாட்களுக்கு ஒரு முறை 2, 3 முறை பயன்படுத்தலாம்.

உயிர்மப் பூச்சி விரட்டியானது வேப்ப எண்ணெய், புங்க எண்ணெய், மர வெப்பச் சிதைவு எண்ணெய் , நாட்டு மாட்டுக் கோமியம் மூலிகைச்சாறு ஆகியவை துல்லியமாக கலந்த ஒரு கலவையாகும். இது பயிர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி மற்றும் நோயினை எதிர்கொள்ளும் திறனை அதிகரிக்கிறது. தீமை செய்யும் பூச்சிகளை மட்டும் தாக்கும். உயிர்மப் பூச்சி விரட்டி சாறு உறிஞ்சும் பூச்சிகள், இலைகளை கடித்து சாப்பிடும் பூச்சிகள் போன்ற அனைத்து விதமான பூச்சிகளையும் திறம்பட கட்டுப் படுத்துகிறது. மேற்கூறிய உயிர்ம முறையில் தயாரிக்கப்படும் பூச்சி விரட்டிகளை பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு மாற்றாக பயன்படுத்தி சுற்றுச் சூழல் மாசுபடாமல் பாதுகாக்கலாம் என இராமநாதபுரம் விதைச்சான்று மற்றும் அங்கக்ச் சான்று உதவி இயக்குநர் பொ.இரத்தினகுமார் தெரிவித்துள்ளார்.

# புதுக்கோட்டை வட்டாரத்தில் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம்

புதுக்கோட்டை, பிப்.20

வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் அட்மா மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம், ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய கூட்ட அரங்கில், நடைபெற்றது. கூட்டத்திற்கு புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சு.அன்பரசன், தலைமை யேற்று அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்க மளித்தார்கள். அட்மா வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு உறுப்பினர்கள் தலைவர் மு.கலியமூர்த்தி முன்னிலை வகித்தார்கள்.

புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் நடப்பு ஆண்டில் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்ட



செயல்பாடுகள் குறித்து உறுப்பினர்களிடம் கலந்து ஆலோசனை செய்தார்கள். அதன்பின் புத்தாம்பூர் கால்நடை உதவி மருத்துவர் பு.அபிநயா பருவ காலங்களில் கால்நடைகள் பராமரிப்பு தீவன முறைகள் மற்றும் பல்வேறு மானியத் திட்ட விபரங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்கள்,

வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை வேளாண்மை அலுவலர் கு.ஆ.நிரஞ்சன், விற்பனை துறையில் செயல் படுத்தப்படும் மானியத் திட்டங்கள் மற்றும் அதனை எவ்வாறு விவசாயிகள் பயனடைவது என்ற விபரத்தினை விவசாயி களுக்கு எடுத்துக் கூறினார்.

அதனைத் தொடர்ந்து முனைவர் ஜெ.பாலமுருகன் விவசாயி களுக்கு தேவையான தொழில்நுட்பம் மற்றும் மண்வள மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். மேலும் புதுக்கோட்டை வட்டார தோட்டக்கலை அலுவலர் செ.ஐஸ்வர்யா, துறையில் செயலபடுத்தப்படும் திட்ட செயல் பாடுகள் மற்றும் மானிய விபரங்கள் குறித்து எடுத்துக் கூறினார்கள். அதனைத் தொடர்ந்து பட்டு வளர்ச்சித் துறை உதவி ஆய்வாளர் இரா.சத்யா, பட்டு வளர்ப்பு மற்றும் மானியத் திட்ட விபரங்கள் குறித்து விளக்கமளித்தார்.

முன்னதாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் பா.தேவி, அட்மா திட்டத்தில் 2025-26-ஆம் ஆண்டிற்கான முதல் கட்ட நிதி விடுவிப்பு குறித்த தீர்மானங்களை உறுப்பினர்களிடம் ஒப்பு தலுக்காக வாசித்தார். கூட்டத்தில் பல்வேறு கிராமங் களிலிருந்து 20க்கும் மேற்பட்ட வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு அவர்கள் முன்னிலையில் 3 தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் வேளாண்மை அலுவலர் ஆ.அபிநயா கலந்து கொண்டார்கள், கூட்டத்திற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் ரா.ஸ்ரீநிதி செய்திருந்தார்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கிராம வேளாண் முன்னேற்ற குழு பயிற்சி கூட்டம்




சேலம், பிப்.20

சேலம் மாவட்டம், அயோத்தியாப் பட்டிணம் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் எம்.பாலப்பட்டி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழு ராபி பருவ தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் ராபி பருவ வேளாண் பயிர்களான நெல், கம்பு, ராகி, உளுந்து, தட்டைப்பயிறு, கொள்ளு மற்றும் நிலக்கடலை, தோட்டக்கலை பயிர்களான தக்காளி, வெண்டை, கத்தரி, மஞ்சள் மற்றும் பாக்கு ஆகியவற்றில் புதிய சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும், நுண்ணீர்பாசனம், பயிர் காப்பீடு திட்டங்கள், இடுபொருட்கள் வாங்கும் போது பணம் இல்லா பரிவர்த்தனை குறித்தும், புல் நறுக்கும் கருவி மற்றும் தீவனப்பயிர் சாகுபடி மானிய திட்டங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வி விவசாயிகளை வரவேற்று, அட்மா திட்டம் குறித்து எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் ராஜ்குமார், கால்நடை உதவி மருத்துவர் பாண்டியன், தோட்டக்கலை இயக்குனர் உதவி கோதைநாயகி ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் துறை சார்ந்த மானியங்கள் குறித்து எடுத்துரைத்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்களான செல்வி மற்றும் தமிழ் செல்வி ஆகியோர் செய்திருந்தனர்.



# எண்ணெய் வித்துப் பயிர்களில் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி



கடலூர், பிப்.20

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையத்தில், ஆத்மா திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியபுரம் வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் (18.02.26-20.02.26) 3 நாட்கள் எண்ணெய் வித்துப் பயிர்களில் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி கற்றுக்கொண்டு பயன் பெற்றனர். வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப் பாளர் முனைவர் க.நடராஜன், இப்பயிற்சியை துவக்கி வைத்தார். மேலும் எண்ணெய் வித்துப்பயிர்களில் புதிய இரகங்களை விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார், மற்றும் மணிலா, எள், ஆமணக்கு ஆகிய பயிர்களின் முக்கிய இரகங்கள் மற்றும் விதை உற்பத்தி தொழில்நுட்பங்களை தெளிவாக விளக்கினார்.

முனைவர் க.கலைச்செல்வி (உழவியல்), தொழில்நுட்ப உரையில் எண்ணெய் வித்துப் பயிர்களில், ஆமணக்கு பயிரில் உள்ள உழவியல் தொழில்நுட்பங்கள் களை மேலாண்மை, உரம் மற்றும் சாகுபடி குறிப்புகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். முனைவர் ஜெ.ஜெயகுமார் (நூற்புழுவியல் துறை), எண்ணெய் வித்துப் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு கூறினார்.

முனைவர் கண்ணன் (உணவியல் துறை), எண்ணெய் வித்துப் பயிர்களில் மதிப்பு கூட்டுதல் பற்றி தெளிவாக விளக்கினார். குமார் (பண்ணை மேலாளர்) மற்றும் மீனலட்சுமி (தொழில்நுட்ப அலுவலர்) வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உள்ள மாதிரி திடல்கள் பற்றியும் அதன் செயல்விளக்கங்கள் மற்றும் பலா, முந்திரியில் ஒட்டுக்கட்டும் முறை பற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றி தெளிவாக விளக்கினார்.

புதுக்கூரப்பேட்டையில் உள்ள புதிய பண்ணையில் நிலக்கடலை, எள் பயிரை நேரில் பார்வையிட்டு விவசாயிகள் தனது ஐயங்களை தெளிவு படுத்தி கொண்டனர். இப்பயிற்சியில் சாமுண்டீஸ்வரன், பவானி, விஷ்ணுப்பிரியா ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும் இப்பயிற்சியில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# சேலம் வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழு கூட்டம்



சேலம், பிப்.20

சேலம் வட்டாரத்தில் வேளாண்மை துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் மூலம் வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழு கூட்டம் மற்றும் வட்டார தொழில்நுட்பக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக உழவர் பயிற்சி நிலையம் வேளாண்மை துணை இயக்குநர் அருணா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா முன்னிலை வகுத்து உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் பயன்பாடுகள் பற்றி தெரிவித்தார். வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழு தலைவர் நடராஜன் கூட்டத்திற்கு தலைமை ஏற்று வேளாண்துறைக்கு தமிழக அரசு வழங்கியுள்ள நிதி ஒதுக்கீடு மற்றும் சிறப்பு திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

முன்னதாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் கந்தசாமி 2025-26 ஆண்டின் இரண்டாம் நிதி ஒதுக்கீடு இலக்கு பற்றியும் குறிப்பாக செயல்விளக்கம் முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது என்பதையும் பருவம் சார்ந்த தொழில்நுட்பங்களையும் தெரிவித்தார்.

வேளாண் பொறியியல் துறையின் உதவி பொறியாளர் விமலாரமணி, வேளாண் பொறியியல் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர்கள் மகாலட்சுமி மற்றும் சௌமியா ஆகியோர் வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி தெரிவித்தனர். உதவி தோட்டக்கலை அலுவலர் டேவிட், தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி தெரிவித்தார்.

மண் பரிசோதனை நிலையத்தின் வேளாண்மை அலுவலர் தனலட்சுமி, மண் மாதிரியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார்.

மேலும் இக்கூட்டத்தில் பனைமரத்துப்பட்டியில் தங்கி பயிற்சி பெறும் PGP வேளாண் கல்லூரி நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் உழவன் செயலி மற்றும் தாவர செயலி பற்றி செயல் விளக்கம் செய்து காண்பித்தனர். கூட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி தொழில்நுட்ப மேலாளர் செல்லி ராஜ்குமார் செய்திருந்தார்.



# இலக்கியங்களில் சுற்றுச்சூழல் பற்றிய தகவல்



ஆதிகாலம் முதல் பண்டைய தமிழர்கள் தாவரங்களை (செடி, கொடி மரங்களை) அளவற்ற பக்தியும் மதிப்பும் கொடுத்து வந்தனர். அதனால் தான் ஒவ்வொரு கோவிலிலும் தல விருட்சமாக ‘ஒவ்வொரு மரத்தை நிர்ணயம் செய்து வழிவகையாக வழிபாடு செய்து வருகின்றனர். அது மட்டுமல்ல ஒவ்வொரு ராசி நட்சத்திரத்திற்கும் ஒவ்வொரு மரத்தை நட்டு பாரமரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இன்றும் கூட வீடுகளில் துளசி மாடம் வைத்து வலம் வருகின்றனர்.

**பருவகாலங்களில் தாவரங்களின் வளர்ச்சியை பற்றி தகவல்?**

பருவ காலங்களில் தாவரங்களின் வளர்ச்சி (விதைப்பு முதல் அறுவடை வரை) மாற்றம் அடைவதை சங்க கால புலவர்கள் தங்களுடைய பாடலில் குறிப்பிட்டுள்ளனர். எடுத்துக்காட்டாக பனிக்காலத்தில் செருந்தியின் மொட்டு மலர்ந்த பேரழகை

‘பின்னுவிறெறிந்த கூந்தலும்
கழியும் வினதும் சான்தோறும் பல புலந்து‘

என புலவர் குறுவழிதியால் பாடல் பெற்றது.

சுற்றுச்சூழலுக்கு அரணாகவும் சுற்றுச்சுழலை வைத்து ஒரு பருவம் வருவதை சொல்லக்கூடிய அளவுக்கு சங்க கால புலவர்களுக்கு ஞானம் அறிவு இருந்தது. செழிப்பு வளர்ச்சி மகிழ்ச்சி மலர்ச்சி ஆகியவற்றின் குறியீடுகளாக ‘மரங்கள்‘ பார்க்கபட்டன.

**அந்த காலத்தில் மக்களின் வாழ்க்கை எப்படி இருந்தாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன?**

அந்த காலத்தில் மக்கள் ஐவகை நிலங்களில் (குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம்) வாழ்ந்து வந்தனர். எடுத்துக்காட்டாக குறிஞ்சி நில மக்கள் மிகத் தாழ்வான சிறிய குடிசைகளை அமைத்தனர். அதை வேய்வதற்கு தினத் தாளையும் (தட்டை) நெல்லின் தாளையும் கூரையாக வேய்ந்த குடில்களில் வாழ்ந்தார்கள். மேலும் வரகு, கேழ்வரகு தட்டை தாள்களை குளிர்ச்சியாக வேய்ந்த தாக தகவல் உள்ளன. தங்களுடைய குடிசைகளுக்கு அருகேயுள்ள கால்நடைகள் (ஆடு, மாடு) தங்குவது கொட்டில் அமைத்துள்ளனர். இன்றளவும் கூட கிராமங்களில் பார்க்கலாம்.

‘படுநீர் புணரியன் பறந்தபடி
பரந்த பாடி குவலை கூரை முழ்கிய தெருவில்‘

**குறிஞ்சி பாட்டில் 96 வகையான மலர்கள்**

கபிலர் குறிஞ்சி பாட்டில் 96 வகையான பூக்களின் பெயரை குறிப்பிட்ட உடன் எந்த பருவத்தில் எந்த மலர் பூக்கும் என்பதை தெளிவாக குறிப்பிட்டுள்ளார். ஓரறிவு படைத்த தாவரம் முதல் 5 அறிவு கொண்ட ஆவினங்கள் வரை தேவையறிந்து அந்த அந்த சூழலுக்கேற்றவாறு அந்த காலத்துல படிப்பறிவே இல்லாத மக்கள் போற்றி புகழ்ந்து வாழ்ந்து வந்தனர்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்கும் செய்ய வேண்டிய மற்றும் கூடாதவை




நாமக்கல், பிப்.20

பி.ஜி.பி வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள், விவசாயிகளிடையே பூச்சிக்கொல்லி மருந்துகளை பாதுகாப்பாகவும் பொறுப்புடனும் பயன்படுத்தும் முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், ஒரு விவசாயியின் வயலில் பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்பாட்டின் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை (Do's & Don'ts) என்ற தலைப்பில் செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்த நிகழ்ச்சியில், பயிர்களை பாதுகாப்பதற்காக பூச்சிக் கொல்லிகளை அளவோடு மற்றும் சரியான முறையில் பயன் படுத்துவதின் முக்கியத்துவம், அதனால் விவசாயிகள், நுகர் வோர் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு எவ்வாறு உறுதி செய்யப் படுகிறது என்பதையும் மாணவிகள் விளக்கினர். மேலும், பூச்சிக்கொல்லி மருந்துகளை சரியாக கையாளுதல், கலக்கும் முறை, தெளிக்கும் தொழில்நுட்பங்கள் மற்றும் தெளிப்பு முடிந்த பின் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் குறித்து தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன. இந்த செயல்விளக்க நிகழ்ச்சி மூலம், விவசாயிகள் பாதுகாப்பான பூச்சிக்கொல்லி பயன்பாட்டின் அவசியத்தை புரிந்து கொண்டு, நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண்மையை




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# காளான் வளர்ப்பு பயிற்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.20

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டார மாணவர்கள் முன்னெடுத்த காளான் வளர்ப்பு விவசாயிகள் பயிற்சி நிகழ்ச்சி சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி, சிறு மற்றும் குறைந்த நில வளம் கொண்ட விவசாயிகளுக்குக் கூட குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் ஈட்டக்கூடிய மாற்று வேளாண் தொழிலாக காளான் வளர்ப்பை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டது.

பயிற்சியின் தொடக்கத்தில், காளான் வளர்ப்பின் தற்போதைய சந்தை நிலை, உள்ளூர் மற்றும் நகர்ப்புற தேவைகள், உணவுப் பாதுகாப்பில் காளான்களின் பங்கு ஆகியவை விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டன. குறிப்பாக, ஊட்டச்சத்து குறைபாடுகளை நீக்கும் உயர்தர புரதச்சத்து உணவாக காளான்களின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

பயிற்சியின் முக்கிய அம்சமாக, நேரடி செயல்முறை (Demonstration) நடத்தப்பட்டது. இதில்,நெல் வைக்கோலை வெட்டுதல் மற்றும் ஊறவைத்தல்,கிருமி நீக்கம் (Sterilization) முறைகள், விதைப்பு (Spawning) செய்முறை, பைகள் அடுக்குமுறை மற்றும் வளர்ப்பு அறை அமைத்தல், ஈரப்பதம் பராமரிக்க தண்ணீர் தெளித்தல், 15–20 நாட்களில் அறுவடை செய்யும் நடைமுறைஎன அனைத்தும் தெளிவாக கையாளப்பட்டன. விவசாயிகள் தாங்களே செயலில் ஈடுபட்டு அனுபவம் பெற்றனர்.

காளான் வளர்ப்பின் செலவு – வருமான மதிப்பீடு (Cost Benefit Analysis) பற்றியும் விளக்கப்பட்டது. குறைந்த முதலீடு, குறுகிய காலத்தில் அறுவடை, அதிக லாப வாய்ப்பு, வீட்டிலிருந்தே மேற்கொள்ளக்கூடிய தொழில் என்பன வலியுறுத்தப்

பட்டன. மேலும், பெண்கள் சுயஉதவி குழுக்கள் (SHGs) மற்றும் இளைஞர்கள் தொழில்முனைவோராக உருவாகும் வாய்ப்புகள் குறித்து பேசப்பட்டது.

**மதிப்புக் கூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் :** காளான் மூலம் தயாரிக்கக்கூடிய மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் (காளான் ஊறுகாய், காளான் பொடி, காளான் சூப் மிக்ஸ் போன்றவை) பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டன. அருகிலுள்ள சந்தைகள், ஹோட்டல்கள், மளிகைக் கடைகள் மற்றும் ஆன்லைன் விற்பனை வாய்ப்புகள் பற்றியும் விளக்கப்பட்டது. பயிற்சி முடிவில் விவசாயிகளிடமிருந்து கருத்துகள் பெறப்பட்டன. பலர் காளான் வளர்ப்பை தொடங்க விருப்பம் தெரிவித்தனர். சிலர் தங்கள் பண்ணையில் முன்மாதிரி (Pilot) முயற்சி மேற் கொள்ளத் தயார்.

இந்த பயிற்சி நிகழ்ச்சி, மாணவர்களுக்கு சமூக உறவு திறன், திட்டமிடல் திறன் மற்றும் தொழில்நுட்ப அறிவை பகிரும் திறனை மேம்படுத்தும் அனுபவமாக அமைந்தது. கல்வியில் கற்ற அறிவை நேரடியாக விவசாயிகளிடம் பகிர்ந்ததில் பெருமகிழ்ச்சி அடைந்தோம். இப்பயிற்சி நிகழ்ச்சி கிராமப்புற விவசாயிகளுக்கு மாற்று வருமான வாய்ப்பை உருவாக்கும் முக்கியமான படியாக அமைந்தது. காளான் வளர்ப்பு, நிலையான மற்றும் லாபகர மான வேளாண் தொழிலாக வளர்ந்து, விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு துணை புரியும் என்ற நம்பிக்கையுடன் இந்நிகழ்ச்சி நிறைவுற்றது.

# சோலார் லைட் ட்ராப் மூலம் பூச்சி கட்டுப்பாடு

# வேளாண் மாணவர்கள் களப்பயிற்சி

நாமக்கல், பிப்.20

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் தங்களின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக கிராமப்புறங்களில் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். விவசாயிகளுடன் நேரடியாக தொடர்பு கொண்டு, புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, பயிர் பாதுகாப்பு முறைகளை விளக்குவது இவர்களின் முக்கிய நோக்கமாகும். அந்த வகையில், அகரம் கிராமத்தில் விவசாயிகளை சந்தித்து பயனுள்ள அறிவுரைகள் வழங்கினர்.



இன்றைய சந்திப்பில் முக்கியமாக “Solar Light Trap” குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. சோலார் மின்சாரத்தை பயன்படுத்தி இயங்கும் இந்த ஒளி வலை, இரவு நேரங்களில் பயிர்களை சேதப்படுத்தும் பல்வேறு தீங்கு விளைவிக்கும் பூச்சி களை ஈர்த்து கட்டுப்படுத்தும் சாதனமாகும். குறிப்பாக பருத்தி, காய்கறி, தானிய வகைகள் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் இது பயனுள்ளதாகும் என மாணவர்கள் விளக்கினர்.

Solar Light Trap அமைப்பதற்கான முறைகள், அதனை எப்போது இயக்க வேண்டும், எத்தனை ஏக்கருக்கு ஒன்று போதுமானது போன்ற நடைமுறை தகவல்களையும் மாணவர்கள் பகிர்ந்தனர். பொதுவாக ஒரு ஏக்கருக்கு ஒரு ஒளி வலை அமைத்தால் போதுமான கட்டுப்பாடு கிடைக்கும் எனவும், மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை இயக்குவது சிறந்த பலனை தரும் எனவும் தெரிவித்தனர். இதன் மூலம் ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு குறைந்து, செலவினமும் குறையும்.

மேலும், இந்த சோலார் ஒளி வலை சுற்றுச்சூழலுக்கு உகந்ததுடன், மின்சாரச் செலவில்லாமல் இயங்கும் தன்மை கொண்டது என்பதும் விவசாயிகளிடம் வலியுறுத்தப்பட்டது. நன்மை பயக்கும் பூச்சிகளை பாதுகாத்து, தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை மட்டுமே கட்டுப்படுத்த உதவும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறையின் ஒரு பகுதியாக இதை பயன் படுத்தலாம் என கூறப்பட்டது.

இந்நிகழ்வின் முடிவில், விவசாயிகள் பல்வேறு கேள்விகளை எழுப்பி, தங்கள் நிலங்களில் இதை பயன்படுத்த ஆர்வம் தெரிவித்தனர். மாணவர்களின் இந்த முயற்சி, அறிவியல் அடிப்படையிலான தொழில்நுட்பங்களை கிராம நிலைகளுக்கு கொண்டு சென்று, விவசாய உற்பத்தி மற்றும் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் ஒரு சிறந்த முன்னுதாரணமாக அமைந்தது.

# தேனி உற்பத்தி குறித்தறிந்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாமக்கல், பிப்.20

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் பகுதியில் உள்ள பட்டணம் கிராமத்தில் IFS அலகுக்கு வருகை தந்தோம். அங்கு, உயிர்வாயு அலகு, ஒருங்கிணைந்த விவசாயம், தேன் உற்பத்தி, பால் உற்பத்தியாளர் சங்கம், மானியம் பற்றி அறிந்து கொண்டோம்.



**உயிர்வாயு அலகு**

– 35 ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

– வீட்டு பயன்பாட்டிற்கு பயன்படுகிறது.

– பசு மற்றும் ஆடு உரம் பயன்படுத்தப்படுகிறது.

**உற்பத்தி**



– சமையலுக்கு வாயு

– கரிம உரம் (சிறந்த உரம்)

**நன்மைகள்**

– LPG செலவு குறைகிறது.

– மாசு குறைகிறது.

– உயர்தர உரம் கிடைக்கிறது.

**தேனீ பெட்டி**

– 4 பெட்டிகள் வைத்துள்ளனர்.
– தேன் சேகரித்து வீட்டு பயன்பாட்டிற்கு பயன்படுத்துகின்றனர்.

**கொட்டகை**

– வெங்காயம் சேமிப்பு மற்றும் ஆடு, பசு கொட்டகைக்கு அரசு மானியம் வழங்கியுள்ளது.

**ஒருங்கிணைந்த விவசாயம்**

– பயிர்கள் – பசு மற்றும் ஆடுகளுக்கு தீவனம்

– பசு உரம் – உயிர்வாயு அலகு

– உயிர்வாயு கழிவு – வயலுக்கு உரம்

– பயிர் கழிவு – ஆடு தீவனம்

– ஆடு உரம் – கம்போஸ்ட்

இந்த ஒருங்கிணைந்த விவசாயம் அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகிறது மற்றும் 35 ஆண்டுகளாக இதை பின்பற்றி வருகின்றனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# சைலேஜ் (ஊறுகாய்ப் புல்) தயாரிப்பு செய்முறையை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவிகள்

நாமக்கல், பிப்.20

சைலேஜ் (ஊறுகாய்ப் புல்) தயாரிப்பு செய்முறையை வேளாண் கல்லூரி மாணவிகள் மேற்கொண்டனர்.



**சைலேஜ் தயாரிப்பு செய்முறை**

கம்பு நேப்பியர், சோளம், தீவன மக்காச்சோளம் போன்ற தீவனப் பயிர்களை சேகரித்து, சாப்பர் இயந்திரத்தின் உதவியுடன் சிறிய துண்டுகளாக நறுக்க வேண்டும். பின்னர் உப்பு மற்றும் வெல்லத்தை நீரில் கலந்து, அந்த கலவையை நறுக்கிய தீவனத் துண்டுகளின் மீது தெளிக்க வேண்டும். இதனை காற்று புகாத வகையில் தயாரிக்கப்பட்ட பையில் நிரப்பி நன்கு கட்ட வேண்டும். அந்தப் பையை 6 முதல் 7 மாதங்கள் வரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். பை திறந்தவுடன், உள்ளடக்கத்தை 3 நாட்களுக்குள் பயன்படுத்தி முடிக்க வேண்டும். ஒரு பை சைலேஜ், ஐந்து மாடுகளுக்கு தேவையான தீவனமாக பயன்படும். இந்த முறையில் தயாரிக்கப்படும் சைலேஜ், கால்நடைகளுக்கு சத்தான மற்றும் சீரான தீவனமாக பயன்படுகிறது.

# ரோஜாவில் மொட்டு ஒட்டுதல் பற்றி விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்

திருச்சி, பிப்.20



திருச்சிராப்பள்ளி (சமயபுரம்) தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை கல்லூரியை சேர்ந்த இறுதி ஆண்டு மாணவிகள் கிராமிய வேளாண்மை பயிற்சி (RAWE) திட்டத்தின் கீழ், புள்ளம்பாடி வட்டத்திற்கு உட்பட்ட வெங்கடாசலபுரம் கிராமத்தில் ரோஜாவில் மொட்டு ஒட்டுதல் பற்றி விவசாயிகளிடம் கூறினோம்.

**ரோஜாவில் மொட்டு ஒட்டுதல்**

✓குண்டான, ஆனால் அதிக நீளம் இல்லாத மொட்டு தள்ளி நடு பகுதியில் தேர்ந்தெடுக்கப்படுகிறது

✓அதை கூர்மையான கத்தியின் மூலம் கீறல் செய்து அகற்றப்படுகிறது.

✓தேர்ந்தெடுக்கப்பட்ட ஆணிவேர் மீது டி வடிவ கீறல் மொட்டை சேர்ந்து கட்டப்பட்டுள்ளது.

✓ஒட்டு மொட்டிலிருந்து புதிய தளிர் சும்மா பத்து சென்டிமீட்டர் நீளமாக இருக்கும்போது அதை புதிய செடியாக எடுத்து நடப்படு கிறது.

✓துளிர்பதற்கு வேர் தண்டுகள் சரியான முறையில் தேர்வு செய்ய வேண்டி உள்ளது.

✓ரோஜாவில் பொதுவாக டீபர்ட் கிராஃப்டிங் பயன்படுத்தப் படுகிறது.

✓விதை மூலம் பெருக்கம் செய்யாது.

✓ஒரே தர மலர்கள் பெற கலப்பு முறை அவசியம்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கிரியா விவசாயிகள் பாதுகாப்பு விவசாயம் தொடர்பான தங்களின் சந்தேகங்களை மாணவர்களிடம் கேட்டு தெளிவு பெற்றன.

# தர்பூசணி வயலில் மகசூல் அதிகரிக்க வெல்லக் கரைசல் செயல்முறை விளக்கம்



நாமக்கல், பிப்.20

பி.ஜி.பி வேளாண்மை கல்லூரி மாணவர்கள் சித்தாளந்தூரில் உள்ள செந்தில்ராஜா என்பவரின் தர்பூசணி வயலைப் பார்வை யிட்டு, மகசூலை அதிகரிக்கும் நோக்கில் வெல்லக் கரைசல் தயாரிப்பு மற்றும் அதன் பயன்பாட்டை செயல்முறை விளக்கமாக கூறினர்கள். இயற்கை மகரந்தச் சேர்க்கையாளர்களான தேனீக்களை ஈர்க்கும் வகை யில் 1 கிலோ வெல்லம் மற்றும் 20 கிராம் ஏலக்காய் நன்றாக

நசுக்கி 20 லிட்டர் சுத்தமான தண்ணீரில் கலந்து 20 நிமிடங்கள் ஊறவைத்து, பின்னர் சுத்தமான துணியால் வடிகட்டி தெளிப் பானில் நிரப்பினர். பூக்கும் நிலையில் அதிகாலை 5.00 மணி முதல் 6.00 மணி வரை இந்த கரைசல் தெளிக்கப்பட்டதால், வெல்லத்தின் இனிய மணமும் ஏலக்காயின் நறுமணமும் தேனீக்களை வயலுக்கு அதிகமாக ஈர்த்தது. இதன் மூலம் மகரந்தச் சேர்க்கை மேம்பட்டு, பழ அமைப்பு அதிகரித்து, ஒரே மாதிரியான பழ வளர்ச்சி கிடைத்து, மகசூல் உயர்வு ஏற்படும் என மாணவர்கள் விளக்கமளித்தனர். மேலும், இது குறைந்த செலவில் மேற்கொள்ளக்கூடிய சுற்றுச்சூழல் நட்பு முறையாகும் என்றும் தெரிவித்தனர்.

## தென்னை மரத்திற்கு அமோனியம் சல்பேட் உரம் செய்முறையை விளக்கிய வேளாண் மாணவிகள்



நாமக்கல், பிப்.20

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை வட்டாரத்தில் தென்னை மரங்களுக்கு அமோனியம் சல்பேட் உரம் பயன் படுத்தும் முறையை விளக்கும் செய் முறை விளக்க நிகழ்ச்சி நடத்தப் பட்டது. இதில் விவசாயிகளுக்கு உரம் இடும் சரியான நடை முறைகள் மற்றும் பயன்கள் குறித்து தெளிவாக விளக்கப்பட்டது.

### செய்முறை

- தென்னை மரத்தின் அடிப்பகுதியிலிருந்து 1.8 மீட்டர் தூரத்தில் ஒரு குழி (furrow) தோண்ட வேண்டும்.
- அந்த குழியில் 130 கிராம் அமோனியம் சல்பேட் உரத்தை சமமாகப் பயன்படுத்த வேண்டும்.
- உரம் இடப்பட்ட பின்னர் குழியை மூடி, மரத்திற்கு முறையாக நீர் பாய்ச்ச வேண்டும்.

### பயன்கள்

- தெங்காயின் எண்ணெய் சத்தை அதிகரிக்கிறது.
- இதில் 20.5 சதவீதம் நைட்ரஜன் (N) உள்ளது.

இந்த செய்முறை காண்பிப்பு நிகழ்ச்சி மூலம் விவசாயிகள் உரத்தை சரியான அளவில் மற்றும் முறையில் பயன்படுத்து வதன் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டனர்.

**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# டிரைக்கோகிராம்மா கிலோனிஸ் [Trichogramma chilonis] காட்சி விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



கிருஷ்ணகிரி, பிப்.20

கிருஷ்ணகிரி மாவட்டம், பையூர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவிகள், ஊரக தோட்டக் கலைப் பணி அனுபவம் (RHWE) திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டம் வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூரில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இப்பயிற்சியின் ஒரு பகுதியாக, கம்மாளப்பட்டி பகுதியில் திருமதி வசந்தி அவர்களின் வயலில் டிரைக்கோகிராம்மா கிலோனிஸ் (Trichogramma chilonis) என்ற உயிரியல் கட்டுப்பாட்டு காரணி (Bio-control Agent) பயன்பாடு குறித்து நேரடி காட்சி விளக்கம் நடத்தப்பட்டது.

Trichogramma chilonis என்பது மிகச் சிறிய அளவிலான பராசிட்டாய்டு தேனீ வகையைச் சேர்ந்த பூச்சி ஆகும். இது பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் தண்டு துளைப்பான், இலை துளைப்பான் போன்ற புழுக்களின் முட்டைகளில் முட்டையிட்டு அவற்றை அழிக்கும். இதன் மூலம் தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் உருவாகும் முன்பே கட்டுப்படுத்தப்படுகின்றன.

# வேளாண் மாணவிகளின் மண் பரிசோதனை பயிற்சி முகாம்

தஞ்சாவூர், பிப்.20

தஞ்சாவூ மாவட்டம், குருங்குளம் மேல்பாதி வட்டாரம், தோழகிரிபட்டி கிராமத்தில் ஆர்.வி.எஸ் வேளாண் கல்லூரி மாணவிகள், கல்லூரி இயக்குநர் பாண்டியராஜன் மற்றும் கல்லூரி முதல்வர் கிருஷ்ணமூர்த்தி வழிகாட்டலில், வேளாண் திட்ட பொறுப் பாளர்கள் சுந்தரவடிவு மற்றும் அருண்குமார் (உதவி பேராசிரியர், வேளாண் விரிவாக்கத்துறை) ஆகியோர் ஒருங்கிணைப்பிலும், உதவி பேராசிரியர்கள் கரிமனிா மற்றும் ரம்யா ஆகியோர் வழி காட்டுதலின் படியும் ஆரிஸ் அக்ரோ லிமிடெட் மண் பரிசோதனை

நிலையத்துடன் இணைந்து மேற்படி கிராமத்தில் மண் பரிசோதனை மேற்கொண்டனர்.

இதில் வேளாண் கல்லூரி மாணவிகள் மதுமிதா, மிராக்ளின் ஏஞ்சல், மிருதுளாராணி, மோனிகா, மோகன கௌரி, முஹேஸ்வரி, நிவேதினி, நீலாவதி, பவித்ரா மற்றும் பிரதீபா ஆகியோர் மண் பரிசோதனை பயிற்சியில் தங்களது சந்தேகங் களை கேட்டு அறிந்தனர்.

மேலும் விவசாயிகளுக்கு மண் பரிசோதனை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி கல்லூரி மாணவிகள்,விவசாயிகளுக்கு ஊக்கமளித்தனர்.



# தேங்காய் ஊக்குவிப்பு திட்டம் விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.20

பி.ஜி.பி வேளாண் அறிவியல் கல்லூரி மாணவர்கள், மத்திய பட்ஜெட் 2026-27-ல் அறிவிக்கப்பட்ட தேங்காய் ஊக்குவிப்பு திட்டம் (Coconut Promotion Scheme) குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், ஒரு விரிவான செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம், இந்தியாவில் தேங்காய் சாகுபடியின் உற்பத்தி மற்றும் தரத்தை உயர்த்துவதற்காக வயதான, நோய்த் தாக்கம் உள்ள மற்றும் உற்பத்தித் திறன் குறைந்த தேங்காய் மரங்களை அகற்றி, அவற்றிற்கு பதிலாக உயர் மகசூல் தரும் மற்றும் மேம்படுத்தப்பட்ட தேங்காய் ரகங்களை மீண்டும் நடவு செய்வதாகும். இதன் மூலம் நீண்டகாலத்தில் நிலையான தேங்காய் உற்பத்தியை உறுதி செய்வது குறிக்கோளாக உள்ளது.

செயல்விளக்க நிகழ்ச்சியின் போது, வயதான (senile) தேங்காய் மரங்களை மாற்றி மீண்டும் நடவு செய்வதின் அவசியம், நவீன சாகுபடி முறைகள், சரியான இடைவெளி, உர மேலாண்மை, நீர் மேலாண்மை மற்றும் பூச்சி நோய் கட்டுப்பாடு, மேம்படுத்தப்பட்ட தரமான நடவு பொருட்களை பயன் படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு தெளிவாக விளக்கப்பட்டது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

மேலும், இந்த திட்டம் தேங்காய் உற்பத்தி அதிகரிப்பு மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவது, தேங்காய் சார்ந்த மதிப்பு சங்கிலியை (Value Chain) வலுப்படுத்துவது, சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவது மற்றும் கிராமப்புற பொருளாதார வளர்ச்சிக்கு துணைபுரிவது ஆகியவற்றை எவ்வாறு நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதையும் மாணவர்கள் எடுத்துரைத்தனர். இந்த செயல்விளக்க மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி, குறிப்பாக தேங்காய் சாகுபடி அதிகம் நடைபெறும் மற்றும் கடலோர பகுதிகளில் உள்ள விவசாயிகளிடையே, திட்டத்தின் பயன்கள், அரசின் ஆதரவு மற்றும் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் குறித்து விரிவான புரிதலை ஏற்படுத்தி, திட்டத்தை நடைமுறைப் படுத்த ஆர்வத்தை உருவாக்கியது.

# வாலாஜா வட்டாரத்தில் இயற்கை விவசாயக் குழுக்களுக்கு கண்டுணர் சுற்றுலா மற்றும் களப்பயிற்சி

இராணிப்பேட்டை, பிப்.20

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில் பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் முகுந்தராயபுரம், கல்மேல்குப்பம் மற்றும் திருமலைச்சேரி கிராமங்களைச் சேர்ந்த இயற்கை விவசாய குழு விவசாயிகளுக்கான கண்டுணர் சுற்றுலா மற்றும் களப்பயிற்சி, சோளிங்கர் வட்டாரத்தில், போன்னபந்தங்கள் கிராமத்தில் அமைந்துள்ள என்.பி.கே. இயற்கை பண்ணையில் நடைபெற்றது. இப்பயிற்சி வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஜி.திலகவதி, தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தப் பயிற்சியில் முன்னோடி இயற்கை விவசாயி விஸ்வ பாரதி, தமது இயற்கை விவசாய பயண அனுபவங்களையும், மீனமிலம் போன்ற கரிம விளை பொருட்களை அமேசான் போன்ற ஆன்லைன் சந்தைகளில் விற்பனை செய்த அனுபவங்களையும் விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டார். வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், இயற்கை விவசாயத்தில் தொடர்ச்சியான முயற்சி மற்றும் பொறுமையின் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும் கரிமச்சான்று பெறுவதற்கான வழிமுறைகளை எடுத்துரைத்தார்.



பின்னர் காவேரிபாக்கம் வட்டாரத்தில் வேகாமங்கலம் கிராமத்தில் சன்முகராமன், அவர் நிலத்தில் பின்பற்றும் இயற்கை முறை வேளாண்மை குறித்து விளக்கினார்.

குறிப்பாக, பயிர் வளர்ச்சிக்குத் தேவையான பஞ்சகவ்யா, அமிர்த கரைசல் போன்ற இயற்கை இடுபொருட்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பிற்கான இயற்கை பூச்சிவிரட்டிகள் தயாரிக்கும் முறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

நெல் சாகுபடியில் வரிசை நடவு முறையை பின்பற்றுவதன் அவசியம் குறித்தும், அதில் ’கோனோ வீடர்’ போன்ற களை எடுக்கும் கருவிகளைத் திறம்படப் பயன்படுத்தி, எவ்வாறு களைகளைக் கட்டுப்படுத்துவது மற்றும் உற்பத்தியை பெருக்குவது என்பது குறித்தும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இக்களப் பயிற்சியின் மூலம் விவசாயிகள் இயற்கை விவசாயத்தின் நடைமுறை அனுபவங்களை நேரடியாக அறிந்து பயனடைந்தனர். பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு இயற்கை இடுபொருட்கள் வழங்கபட்டது.

பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திவாகர் மற்றும் ஆத்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜெய பிரகாஷ், இந்நிகழ்ச்சியினை சிறப்பாக நடைபெற உறுதுணையாக விளங்கினார்.

